**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 404/2023.**
**வழக்கு சாட்சி – அ.சா. 1 (பட்டியல் சாட்சி –1 ).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ராஜரத்தினம். | ஜாதி | |
| தந்தை பெயர் | சுப்பிரமணி. | தொழில் | லோடுமேன் வேலை. |
| கிராமம் | அல்லிநகரம். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 48/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.06.2026.

**(1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, அல்லிநகரத்தில் குடியிருந்துகொண்டு, லோடு மேனாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். எனக்கும், எதிரிகளுக்கும் இடையே கடந்த 2017–ஆம் ஆண்டு ஒரு சிறு தகராறு ஏற்பட்டது. நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்தக் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு நிலுவையிலிருந்தபோது, நானும், எதிரிகளும் சமாதானமாகிவிட்டோம். அந்த சமாதான மனு **அ.சா.ஆ.2** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சியைப் பிறழ் சாட்சியாகப் பாவிக்ககோரி அரசுத் தரப்பில் அனுமதி கோரியதன்பேரில், சாட்சியைப் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டது:–</u>**

எதிரி மாதேஸ்வரன் எனது மகளிடம் பிரச்சனை செய்தார் என்றும், அது சம்பந்தமாக அவரின் வீட்டிற்குச் சென்று, கண்டித்துவிட்டு வந்தேன் என்றும், அதை மனதில் வைத்துக்கொண்டு கடந்த 24.03.2017 ஆம் தேதியன்று, இரவு 11.00 மணிக்கு நான், எனது வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது, எதிரிகள்

இருவரும் என்னை வழிமறித்து, என்னைப் பார்த்து அசிங்கமாகப் பேசி, கை மற்றும் கல்லால் என்னைத் தாக்கி ரத்தக் காயம் ஏற்படுத்தினார்கள் என்றும், எனது மனைவியும் அவரது தங்கையும் விலக்கிவிட்டார்கள் என்றும், எதிரிகள் செல்லும்போது, உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டிவிட்டுச் சென்றார்கள் என்றும், இது சம்பந்தமாக நான் மருத்துவமனையில் இருந்தபோது, போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றுள்ளதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரிகளுடன் நான் சமாதானம் ஆகிவிட்டபடியால் நான் அவர்களைக் காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்துப் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.06.29 07:13:42 +0530

நீதித்துறை நடுவர்,
தேனி.